**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 9 September 2017

அமைச்சர் சண்முகம் விளக்கம்

# மாற்றியமைக்கப்பட்ட அதிபர் தேர்தல் முறை முக்கியமானது

சிங்கப்பூரில் பல இன பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக மக்கள் வாக்களித்து தேர்ந்தெடுக்கும் அதிபர் தேர்தல் முறையில் அண்மையில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் முக்கியமானவை என்று உள்துறை, சட்ட அமைச்சர் கா.சண்முகம் தெரிவித்துள்ளார்.

அதிபர் பணி என்பது நாட்டினரை ஐக்கியப்படுத்தும் சின்னம் என்பதே இதற்கான காரணம் என்றார் அவர்.

சிறுபான்மை இனங்களுக்கு குறிப்பிட்ட அதிபர் தேர்தலை ஒதுக்கி வைக்க வகை செய்யும் திருத்தங்கள் இல்லை என்றால் அதிபர் பதவி என்னும் இந்த ஐக்கிய சின்னம் கேள்விக் குறியாகிவிடக்கூடும் என்று அமைச்சர் கூறினார்.

இப்படி தேர்தலை ஒதுக்கி வைக்கவில்லை என்றால் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களே தொடர்ந்து அதிபராக பதவி ஏற்கக்கூடிய நிலை வரக்கூடும் என்றார் அவர்.

கொள்கை ஆய்வுக் கழகம் ஏற்பாடு செய்த ஒரு கருத்தரங்கில் பேசிய திரு சண்முகம், அதிபர் தேர்தலை சிறுபான்மை இனங்களுக்காக ஒதுக்கி வைக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கையைச் சில சிங்கப்பூரர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை தாம் ஒப்புக்கொள்வதாகக் கூறினார்.

இருந்தாலும் இந்த மாற்றங்கள் தொடர்பான நிலவரங்களையும் முழுமையான வாதத்தையும் மக்கள் முன்வைக்கும் பட்சத்தில் அதை மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று தான் கருதுவதாக கூறினார்.

சிங்கப்பூர் செப்டம்பர் 23ஆம் தேதி தன்னுடைய எட்டாவது அதிபரை தேர்ந்தெடுக்கவிருக்கிறது. இதற்காக நாடு ஆயத்தமாகி வரும் சூழலில் திரு சண்முகத்தின் கருத்துகள் இடம்பெற்று இருக்கின்றன.

இம்மாதம் நடக்கும் தேர்தல் மலாய்க்காரர் ஒருவரை அதிபராக தேர்ந்தெடுப்பதற்காக நடக்கிறது. சிங்கப்பூரில் கடந்த ஐந்து பருவங்களாக மலாய்க்காரர் எவரும் அதிபராகப் பதவி ஏற்கவில்லை.

தொடக்கத்தில் இரண்டு பிரிவினருக்காக அதாவது மலாய் சமூகம், இந்திய மற்றும் இதர சமூகங்களுக்காக தேர்தலை ஒதுக்கி வைப்பதற்கான திட்டம் இருந்தது என்று திரு சண்முகம் கருத்தரங்கில் கூறினார்.

ஆனால் சீன சமூகத்திடமிருந்து பெறப்பட்ட கருத்துகள், எண்ணங்களை அடுத்து சீன சமூகத்திற்கும் அத்தகைய ஒரு தேர்தலை ஒதுக்கி வைப்பது என்று மாற்றம் செய்யப்பட்டதாக அவர் விளக்கினார்.

சிங்கப்பூரில் ஐந்து பருவங்களுக்கு சீன சமூகத்தினர் யாரும் அதிபர் பதவியை ஏற்கவில்லை என்றால் அடுத்து வரும் தேர்தல் அந்தச் சமூகத்திற்காக ஒதுக்கப்படும். சிங்கப்பூரில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அதிபர் முறை 1991ல் நடப்புக்கு வந்தது. நாட்டின் சேமிப்பைப் பாதுகாப்பது, அரசாங்கச் சேவையின் நேர்மையைக் கட்டிக்காப்பது ஆகியவை மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அதிபரின் மிக முக்கிய பொறுப்புகளாக நிர்ணயிக்கப்பட்டன.

சிங்கப்பூரர்கள் தேர்தலில் வாக்களிக்கும்போது இனம் ஓர் அம்சமாக இருக்கிறது என்பதற்குச் சாட்சியங்கள் உள்ளதாக குறிப்பிட்ட திரு சண்முகம், இதன் காரணமாக சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்கள் அதிபராக தேர்ந்தெடுக்கப்படுவது சிரமமாகிவிடுகிறது என்று விளக்கினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.